# இளங்கலை மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்




பதிப்பாசிரியர்: முனைவர் த.கீதாஞ்சலி

# எழுத்து
# சொல்
# பொருள்
# யாப்பு
# அணி

◆ அகத்தியம் ◆ தொல்காப்பியம் ◆ இறையனார்
களவியல்/இறையனார் அகப்பொருள் ◆ புறப்பொருள்
வெண்பாமாலை ◆ அவிநயம் ◆ காக்கை
பாடினியம் ◆
பன்னிரு படலம் ◆
புறப்பொருள் வெண்பா மாலை ◆ இரத்தின சுருக்கம்
யாப்பருங்கலம் ◆ யாப்பருங்கலக் காரிகை ◆ அமுதசாகரம்
◆ வீரசோழியம் ◆ இலக்கண விளக்கம்
◆ தமிழ்நாவல் ◆ பாட்டியல்
தண்டியலங்காரம் ◆ அகப்பொருள் விளக்கம் ◆ நன்னூல்
◆ நம்பியகப்பொருள் ◆ களவியற் காரிகை ◆ பன்னிரு
பாட்டியல் ◆ நவநீதப் பாட்டியல் ◆ வரையறுத்த பாட்டியல் ◆
சிதம்பரப் பாட்டியல் ◆ மாறனலங்காரம் ◆ மாறன்
அகப்பொருள் ◆ பாப்பாவினம் ◆ பிரபந்த மரபியல்
சிதம்பரச் செய்யுட்கோவை ◆ பிரயோக விவேகம்
இலக்கண விளக்கம் ◆ இலக்கண விளக்கச் சூறாவளி ◆
இலக்கண கொத்து ◆ தொன்னூல் விளக்கம் ◆ பிரபந்த
தீபிகை ◆ பிரபந்த தீபம் ◆ பிரபந்தத் திரட்டு ◆ இரத்தினச்
சுருக்கம் ◆ உவமான சங்கிரகம் ◆ முத்து வீரியம்
சாமிநாதம் ◆ சந்திராலோகம் ◆ குவலயானந்தம்
(மாணிக்கவாசகர்) ◆ குவலயானந்தம் (அப்பைய தீட்சிதர்)
◆ அறுவகை இலக்கணம் ◆ இலக்கணம் ◆
◆ தொன்னூல் ◆
திரட்டு ◆ பாடினியம் ◆ இலக்கண
◆ பாவியல் ◆ வச்சனந்திமாலை

ISBN 938700960-2

# இளங்கலை மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்

(தேசியக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)


பதிப்பாசிரியர்

**முனைவர் த. கீதாஞ்சலி**

உரிமை

**ஆசிரியருக்கே**

முதற்பதிப்பு

**மார்ச், 2020**

வெளியீடு

**தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி**

வடிவமைப்பு, அச்சு

**பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451**

பக்கங்கள் : xx + 280 = 300

விலை: **ரூ. 300/-**

ISBN : 978-93-87009-60-8

## பொருளடக்கம்

1. ஐந்தாம் வேற்றுமை - தற்கால மாற்றங்களும் கற்பித்தல் சிக்கல்களும் 1
முனைவர் மா. ஆசியாதாரா

2. மொழிப்பயிற்சி கற்றல் கற்பித்தல் 8
முனைவர் சு. அந்தோணி செல்வகுமார்

3. தமிழ் இலக்கணம் கற்பித்தலில் உள்ள சிக்கல்களும் தீர்வுகளும் 14
அ. திலிப் ஏங்கல்ஸ்

4. தொடர்கள் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும் 21
முனைவர் க. தனலட்சுமி

5. அடிப்படை இலக்கணம் பயிற்றுவித்தல் 28
முனைவர் ச. ஈஸ்வரன்

6. இளங்கலை மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும், தீர்வுகளும் 36
ச. கோகிலாசெல்வி

7. தமிழ் இலக்கணம் கற்பித்தல் நுட்பங்கள் 44
ப. ஜார்ஜ்

8. தொல்காப்பியத்திற்கு முன் அளபெடையின் வளர்ச்சி 53
ப. கலைகேசவன்

9. தமிழ் எழுத்துக்களைக் கற்றலும் கற்பித்தலும் 61
கா. கணநாதன்

10. இலக்கணம் கற்பித்தல் 67
ப. கார்த்திக்

11. இலக்கணக் கல்வி மேன்மைக்குப் பொருண்மையியலின் துணைமை 73
முர். ப. கொழந்தசாமி

12. வேற்றுமை - கற்பித்தலிலுள்ள சிக்கல்களும் தீர்வுகளும் 80
முனைவர் சு. லோகிதா

13. ஒப்பீட்டு நோக்கில் உளவியலோடு இணைத்து நன்னூல் கற்பித்தல் 87
முனைவர் ம. சரவணகுமார்

14. நிறுத்தக் குறிகள் 93
முனைவர் ஆ. மகாலட்சுமி

15. இளங்கலை மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும் 99
முனைவர் வெ. நிர்மலா

16. தமிழ் இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும் 107
அ.நித்யா

17. தமிழ் இலக்கணத்தில் எழுத்தும் சொல்லும் 113
வெ. முருகேஸ்வரி

18. மூவிடப்பெயர்களும் நிறுத்தற்குறிகளும் 119
முனைவர் பே.மகேஸ்வரி

19. இளங்கலை மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும் 126
முனைவர் இராஜலட்சுமி

20. இளங்கலை மாணவர்களுக்கு இலக்கணம் கற்பிப்பதில் உள்ள சிக்கல்களும் தீர்வும் 133
அ. இராஜன் ஜான்

31. எண்வகை மெய்ப்பாடுகள் 218
அ. மகபூ

32. தமிழ் இலக்கண கருத்தொற்றுமைகளும் கற்பித்தலும் 228
முனைவர் பா. அருள்ஜோதி

33. தமிழ் இலக்கணம் கற்றலில் ஏற்படும் 241
சிக்கல்களும் தீர்வுகளும்
முனைவர் ந. ஜெயசுதா

34. மயங்கொலிச் சொற்களில் ஏற்படும் 250
சிக்கல்களும் தீர்வுகளும்
முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா

35. தமிழலக்கண வரலாற்றில் வினா வெழுத்துக்கள் 257
முனைவர் ந. பிரகாஷ்

36. வினைத்தொகை கற்றல் கற்பித்தலில் 263
சிக்கல்களும் தீர்வுகளும்
முனைவர் த. பரமேசுவரி

37. தமிழ் இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும் 275
சிக்கல்களும் தீர்வுகளும்
வெ. பாரதி

# 32. தமிழ் இலக்கண

# கருத்தொற்றுமைகளும் கற்பித்தலும்

முனைவர் பா. அருள்ஜோதி
தமிழ் உதவிப்பேராசிரியர்
என்.ஜி.எம் கல்லூரி
பொள்ளாச்சி.

இலக்கணம் என்பது இலக்கியத்தின்று தோன்றியது என்பர் மொழியியலார். இதனை "இலக்கியத்தின்று எடுப்படும் இலக்கணம்" எனக் கூறுவர். இலக்கணம் என்பது இலக்கு+ கணம் எனப் பிரித்து "இலக்கு" என்பது நாம் அடையவேண்டிய 'வழி' அல்லது 'வளர்ச்சிநிலை' எனவும், கணம் என்பது 'நூல்' எனவும் பொருள் கொள்ளலாம். அதாவது மொழியின் வளர்ச்சிக்கு அதன் பல்வேறு பரிணாமங்களுக்கும் ஓர் உந்து சக்தியாகத் திகழக்கூடிய நூல் எனப்படும். இலக்கணம் மொழியினைக் குறிப்பிட்ட வரையறைக்குள் கொண்ட வருகிறது. அதனால் மொழி அழகும், நுட்பமும் பெற்று ஒரே சீராக எல்லாரிடத்திலும் பல்கிப் பரவுகிறது. மொழியினை எளிமையாகப் புரிந்து கொள்ளுவதற்கு அடிப்படையாகத் திகழ்கிறது.

இலக்கணம் மனித வாழ்வில் மனஎண்ணங்களை வெளிப்படுத்தும் ஓர் ஊடகம். ஒலிக்குறிப்பினால் உலகையே வென்ற ஒரு வெற்றிப்படைப்பு. காலந்தோறும் மக்களுக்கு நல்வழி காட்டும் வரலாற்றுப் பெட்டகமாகும். இத்தகைச் சிறப்புகளைக் கொண்ட தமிழ் இலக்கணத்தைக் கற்பிக்கும் பொழுது பல்வேறு சிக்கல்கள் தோன்றுகின்றன. இச்சிக்கல்களைக் களைவதற்கு நாம் அவற்றிலுள்ள கருத்தொற்றுமைகளை ஒன்று சேர்த்து கற்பிப்பது சாலச்சிறந்தது. அதற்றான் தொல்காப்பியத்தின் புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப்புணரியல் ஆகிய பகுதிகளில் இடம்பெற்றுள்ள கருத்தொற்றுமை கொண்ட நூற்பாக்களை ஒன்றுபடுத்திக்கூறி விளக்குவதாக இக்கட்டுரை ஆராய்கிறது.

## இன் சாரியை வருதல்

அவற்றுள்

1. இன்னின் இகரம் ஆவின் இறுதி
முன்னர்க் கெடுதல் உரித்து மாகும். -121 (புணரியல்)

இன் சாரியையினது இகரம் ஆ என்னும் சொல்லீற்று முன்னர் கெடுதலும் உரித்தாகும். மேலும் முன்னர் என்றதால் மா என்னும் சொல்லின் முன்னும் அவ்விரு விதியும் எய்தும். எ.கா - ஆவின்கோடு, ஆவினை, ஆன்கோடு எ.கா - மானை, மான்கோடு, மாவின் கோடு

2. அளவாகு மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை
னஃகான் றஃகான் ஆகிய நிலைத்தே -122 (புணரியல்)

அளவுப் பெயராகும் மொழிக்கு முதலாகும் நிலைபெற்ற உயிருக்கு மேலாய் நின்ற இன் சாரியையது னகாரம் றகாரமாகிய நிலைமைத்து, மேலும் இன்னின் னகரம் றகரமாதல் கொள்க.

எ.கா - பதிற்றகல், பதிற்றுழக்கு

எ.கா - பதிற்றொன்று, பதிற்றெழு

3. இன்னென வரூஉம் வேற்றுமை யுருபிற்கு
இன்னென் சாரியை இன்மை வேண்டும். -132(புணரியல்)

இன் என்ற ஐந்தாம் வேற்றுமை உருபுக்கு இன் என்னும் சாரியை வேண்டியதில்லை. வீட்டின் தென்புறம். பாம்பினிற் கடிது தேள் (பாம்பு இன் இன்) எனச் சிறுபான்மை இன் உருபுக்கு இன் சாரியை வரும் என்பர் இளம்புரணர்.

4. அழனே புழனே ஆயிரு மொழிக்கும்
அத்தும் இன்னும் உறழத் தோன்றல்
ஒத்த தென்ப உணரு மோரே -194 (உருபியல்)

அழன் புழனாகிய அவ்விரு மொழிக்கும் அத்துச் சாரியையும், இன்சாரியையும் மாறி வரத் தோன்றும். எ.கா - புழனினை, புழனினொடு, அழனினை, - அழத்தை, அழத்தொடு.

5. குற்றிய லுகரத் திறுதி முன்னர்

முற்றத் தோன்றும் இன்னென சாரியை - 196(உருபியல்)

குற்றியலுகரமாகிய ஈற்றின் முன்னர் முடியத் தோன்றும் எ.கா - வரகினை, வரகினொடு

6. ஞநஎன் புள்ளிக்கு இன்னே சாரியை - 183(உருபியல்)

ஞ, ந என்னும் புள்ளிக்கு ஈறு கட்கு இன் சாரியை வரும் எ.கா - உரிஞினை, பொருநினொடு

7. ஏனைவகரம் இன்னொடு சிவணும் -185(உருபியல்)

ஏனைய வகர ஈறு 'தெவ்' இன்சாரியை பொருந்தும் எ.கா - தெவ்வினை, தெவ்வினொடு

8. ஏழன் உருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச்

சாரியைக் கிளவி இயற்கையு மாகும்

ஆவயின் இறுதி மெய்யொடுங் கெடுமே - 202(உருபியல்)

ஏழாம் வேற்றுமைக்கு, திசைப்பெயர் முன்னர் இன் சாரியையானது நின்று முடிதல் இல்லாமல் இயல்பாயும் முடியும். எ.கா - வடக்கின்கண், கிழக்கின் கண்

9. மகப்பெயர்க் கிளவிக்கு இன்னே சாரியை

- 219(உயிர் மயங்கியல்)

அகரவீற்று 'மக' என்னும் பெயர்ச்சொல்லிற்கு வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் இன் சாரியை வரும் எ.கா - மகவின்கை, மகவின்செவி

10. ஆடூஉ மகடூ ஆயிரு பெயர்க்கும்

இன்னிடை வரினும் மான மில்லை

- 272(உயிர் மயங்கியல்)

ஆடூஉ, மகடூஉவாகிய அவ்விரண்டு பெயர்க்கும் இன் சாரியை இடைவரினும் குற்றம் இல்லை. எ.கா - ஆடூஉவின்கை, மகடூஉவின்கை

11.பெற்றம் ஆயின் முற்றஇன் வேண்டும் -280(உயிர் மயங்கியல்)

முற்கூறிய சே என்பது பெற்றம் (பசு) என்னும் பொருளதாயின் இன் சாரியை பெற்று வரும். எ.கா - சேவின் கொம்பு, சேவின் செதிள், தலை, தோல்

12. வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும்.

- 421(குற்றியலுகரப்புணரியல்)

வண்டும் பெண்டும் என்ற சொல் இன்சாரியையொடு பொருந்தி முடியும். எ.கா -வண்டின்கால், பெண்டின்கால்

13. ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது

-436(குற்றியலுகரப்புணரியல்)

ஆயிரம் என்னும் எண்ணுப்பெயர் வந்தாலும் ஈறு கெட்டு இன் பெற்ற இயல்பின் திரியாதே முடியும் எ.கா - பதினாயிரம்

14. நிறையு மளவும் வரூஉங் காலையும்

குறையா தாகும் இன்னென் சாரியை.

-437(குற்றியலுகரப்புணரியல்)

பத்தென்பதன் முன் நிறைப்பெயரும் அளவுப்பெயரும் வரும் காலத்து இன் என்னும் சாரியைக் குறையாது வந்து முடியும்.

எ.கா - பதின்கழஞ்சு, பதின்தொடி, பதின்கலம்,சாடி

15. ஒன்பா னிறுதி உருவுநிலை திரியாது

இன்பெறல் வேண்டுஞ் சாரியை மொழியே

-459(குற்றியலுகரப்புணரியல்)

ஒன்பது என்னும் எண்ணின் இறுதி தன் வடிவு நிலை திரியாது சாரியை மொழியாகிய இன் பெற்று முடிதல் வேண்டும்.

16. அளவும் நிறையும் ஆயியல் திரியா

- 477(குற்றியலுகரப்புணரியல்)

அளவுப்பெயரும் நிறைப்பெயரும் மேல் ஆயிரத்தொடு புணரும் வழி முடிந்த இயல்பின் திரியாதே நின்று இன் பெற்று முடியும்.

எ.கா - ஒருபதின் கலம், ஒருபதின் உழக்கு, ஒருபதின்அகல்

மேற்கண்ட நூற்பாக்களிலிருந்து 'இன்' சாரியையில் இகரம் கெடுதலும், முழுவதும் கெடுதலும் உண்டு என்பதை அறிய முடிகிறது.

## வற்றுச்சாரியை வருதல்

1. வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்

ஆஃகான் நிற்றல் ஆகிய பண்பே - 123(புணரியல்)

சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகார ஈற்றுச் சொல் முன்னர் வற்றுச்சாரியை தன் வகரமாகிய மெய்கெட அகரம் நிற்றலாகிய பண்பினையுடைத்து.

எ.கா - அவையற்றை, இவையற்றை

2. சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யும்

கெட்ட இறுதி யியல்திரி பின்றே - 184(உருபியல்)

சுட்டெழுத்தினை முதலாகவுடைய வகரவீற்றுச் சொல் ஐகாரமும் அதனால் பற்றப்பட்ட மெய்யும் கெட்டு வற்றுப் பெற்று முடிந்த சுட்டு முதல் ஐகாரவீற்றியல்பின் திரிபின்றி வற்றுப் பெற்று முடியும்.

எ.கா - அவற்றை, அவற்றொடு

3. பல்லவை நுதலிய அகரஇறுபெயர்

வற்றொடு சிவணல் எச்ச மின்றே. - 175(உருபியல்)

பன்மைப் பொருளைக் கருதின பெயர்களின் இறுதி அகரம் வற்றுச்சாரியையொடு பொருந்தும்.

எ.கா - பல்லவற்றை, பல்லவற்றொடு, உள்ளவற்றை, இல்லவற்றை

4. யாவென் வினாவும் ஆயியல் திரியாது - 176(உருபியல்)

யா என்று சொல்லப்படும் ஆகாரவீற்று வினாப் பெயரும் மேற்கூறப்பட்ட வற்றுப் பெறும். அவ்வியல்பின் திரியாது.

எ.கா - யாவற்றை,யாவற்றொடு

5. சுட்டுமுத லாகிய ஐயென் இறுதி
வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே - 178(உருபியல்)

சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகாரவீற்றுச் சொல் வற்றுச்சாரியையொடு பொருந்தி அவ் வீற்று ஐகாரம் நிற்றலும் உரித்து. நில்லாமையும் உரித்து.

எ.கா அவையற்றை, அவையற்றொடு, இவையற்றை, அவற்றை, இவற்றை, உவற்றை

6. யாவென் வினாவின் ஐயென் இறுதியும்
ஆயியல் திரியா தென்மனார் புலவர்
ஆவயின் வகரம் ஐயொடுங் கெடுமே - 179(உருபியல்)

யா என்னும் வினாவினையுடைய ஐகாரவீற்றுச் சொல்லும் இயல்பின்று திரியாது.

எ.கா - யாவற்றை, யாவற்றொடு

7. பலவற் றிறுதி உருபியல் நிலையும் - 221(உயிர் மயங்கியல்)

பல என்னும் அகரவீற்றுச் சொல் உருபுபுணர்ச்சிக்கண் வற்றுப் பெற்று இயல்பின் கண்ணே நிற்கும்.

எ.கா - பலவற்றுக்கோடு, பலவற்றுச்செவி

8. சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்
- 282(உயிர் மயங்கியல்)

சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகாரவீற்றுப் பெயர் உருபு புணர்ச்சியில் ஐகாரம் கெடமாலும், கெட்டும் வற்றுப் பெற்று முடியும்.

எ.கா - அவையற்றுக் கோடு, தலை புறம், அவற்றுக்கோடு

9. சுட்டுமுத லாகிய வகர விறுதி
முற்படக் கிளந்த உருபியல் நிலையும்
- 379 (புள்ளிமயங்கியல்)

சுட்டெழுத்தை முதலாகவுடைய வகர வீற்றுச் சொல் வேற்றுமைக்கண் முற்படச் சொன்ன உருபு புணர்ச்சியின் இயல்பு

நிலைபெற்று வற்றுப் பெற்றுப் புணரும்.

எ.கா - அவற்றுக் கோடு, இவற்றுக்கோடு, வற்றுப் பெறுதலும் உண்டு

எ.கா - அவற்றின் கோடு, இவற்றின் கோடு

இதிலிருந்து ‘வற்று’ சாரியை வகரம் கெட அகரம் நிற்றலும், இயல்பாகவும் வரும் என்பதை உணர முடிகிறது.

**அத்துச் சாரியை பெறுதல்**

1. **அத்தின் அகரம் அகரமுனை யில்லை - 126(புணரியல்)**

அத்துச் சாரியையின் அகரம் அகரவீற்றுச் சொல் முன்னர் இல்லையாகும். எ.கா. - மகத்துக்கை

2. **மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை -186(உருபியல்)**

மகரமாகிய புள்ளியீற்றுச் சொல் முன் வரும் சாரியை அத்துச் சாரியை ஆகும்.

எ.கா - மரத்தை, மரத்தொடு

3. **அத்தவண் வரினும் வரைநிலை இன்றே**

**-220 (உயிர் மயங்கியல்)**

வல்லெழுத்தினோடு அம் ‘மக’ என்னும் சொல்லிடத்து வந்து முடியினும்

எ.கா - மகத்துக்கை, செவி, தலை, புறம்

4. **நிலாவென் கிளவி அத்தொடு சிவணும்**

**- 229(உயிர் மயங்கியல்)**

நிலா என்னும் சொல் அத்துச் சாரியையொடு பொருந்தி முடியும். எ.கா - நிலாஅத்துக் கொண்டான், தந்தான், போயினான்.

5. **மழையென் கிளவி வளியியல் நிலையும்**

**-288 (உயிர்மயங்கியல்)**

மழை என்னும் ஐகாரவீற்றுச் சொல் இகரவீற்று வளி என்னும்

சொல் அத்தும் இன்னும் பெற்று முடிந்த இயல்பின் கண்ணே நின்று முடியும்.

எ.கா - மழையத்துக் கொண்டான், தந்தான்

6. விண்ணென வரூஉங் காயப் பெயர்வயின்
உண்மையும் உரித்தே அத்தென் சாரியை
செய்யுள் மருங்கின் தொழில்வரு காலை
- 306(புள்ளி மயங்கியல்)

விண் என்று சொல்ல வருகின்ற ஆகாயத்தை உணர நின்ற பெயர்க்கண் அத்து என்னும் சாரியை வரும் வருதலும் இல்லை. எ.கா - விண்ணத்துக் கொண்டான்

7. அத்தொடு சிவணும் ஆயிரத் திறுதி
ஒத்த எண்ணு முன்வரு காலை - 318(புள்ளி மயங்கியல்)

ஆயிரம் என்னும் எண்ணுப்பெயரின் மகரமெய் தனக்கு முன் வரும் அகரம் கெடும்.

எ.கா - ஆயிரத்தொன்று

இதிலிருந்து 'அத்து' சாரியை அகரம் கெடவும், இயல்பாகவும் முடியும் என்பதை அறிய முடிகிறது.

### அம் சாரியை வருதல்

1. அம்மின் இறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந ஆகும். -130(புணரியல்)

அம்மின் இறுதியாகிய மகர வொற்று கசதக்கள் வரும்மொழியாக வந்தவிடத்து தன் மெய் திரிந்து ங,ஞ,ந - வாக மாறும்.

2. மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே
-218(உயிர் மயங்கியல்)

அகரவீற்று மரப்பெயராகிய சொல் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

3. புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை.
-245(உயிர் மயங்கியல்)

புளி என்னும் மரத்தினை உணர நின்ற சொல்லிற்கு வரும் சாரியை, அம்முச் சாரியை வரும்

எ.கா - புளியங்கோடு, புளியச்செதிள்

4. குமிழென் கிளவி மரப்பெய ராயின்
பீரென் கிளவியோ டோரியற் றாகும்

-387(புள்ளி மயங்கியல்)

குமிழ் என்னும் சொல் குமிழ்த்தல் என்னும் தொழிலன்றி மரப்பெயராயின் பீர் என்னும் கிளவியோடு ஓர் இயல்பிற்றாய் மெல்லெழுத்து அம்முச் சாரியையும் பெற்று முடியும்.

எ.கா குமிழங்கோடு, குமிழச்செதிள்

5. பீரென் கிளவி அம்மொடுஞ் சிவணும்.

- 366(புள்ளி மயங்கியல்)

பீர் என்னும் சொல் மெல்லெழுத்தேயன்றி அம்முச்சாரியையும் பெற்று வந்து முடியும்.

எ.கா பீரங்கோடு, பீரச்செதிள்

6. மரப்பெயர்க் கிளவிக் கம்மே சாரியை

- 416 (குற்றியலுகரப் புணரியல்)

வன்றொடரின் கண்ணும் மென்றொடரின் கண்ணும் மரப்பெயராகிய சொல்லிற்கு வரும் சாரியை அம்முச் சாரியை ஆகும்.

7. ஈரெழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்
அம்மிடை வரற்கும் உரியவை உளவே
அம்மர பொழுகு மொழிவயி னான.

- 418 (குற்றியலுகரப் புணரியல்)

ஈரெழுத்து ஒருமொழிக் குற்றியலுகரமும் வன்றொடர் மொழிக் குற்றியலுகரமும் முன் முடித்துப் போந்த முடிபுகளன்றி அம்முச்சாரியை இடைவந்து முடித்தற்கு உரியனவும் ஆகும்.

எ.கா ஏறங்கோள், வட்டம் போர்

இக்கூற்பாக்களிலிருந்து 'அம்' சாரியை வருமிடத்து மெல்லெழுத்து மிக்கு முடியும் என்பதை அறியலாம்.

## ஆன் சாரியை பெற்று வருதல்

1. ஆனின் னகரமும் அதனோ ரற்றே

நாள் முன் வரூஉம் வல்முதற் றொழிற்கே - 125(புணரியல்)

நாட்பெயர் முன்னர் வரும் வல்லெழுத்தை முதலாகவுடைய வினைச்சொற்கண்வரும் ஆன் சாரியையின் னகரமும், அந் நான்கனுருபின் கண் வரும் ஆன்சாரியையோடு ஒரு தன்மைத்தாய் னகாரம் றகரமாம்.

எ.கா - பரணியாற்கொண்டான்

மேலும் இன்னின் னகரமும் றகாரமாய்த் திரிதல் கொள்க

எ.கா பனியிற் கொண்டான்

2. நாள்முன் தோன்றுந் தொழில்நிலைக் கிளவிக்கு

ஆன்இடை வருதல் ஐயம் இன்றே - 248(உயிர் மயங்கியல்)

இகரவீற்று நாட்பெயர்களின் முன்னர்த் தோன்றும் விளைச்சொல்லிற்கு ஆன் சாரியை இடை வந்து முடிதல் ஐயம் இல்லை.

எ.கா - பரணியாற்கொண்டான், பரணியாச் சென்றான்

இக்கருத்துக்களிலிருந்து 'ஆன்' சாரியை வருமிடத்து னகரம் றகாரமாய் திரியும் என்பதை அறிய முடிகிறது.

## இக்கு சாரியை வருதல்

1. இக்கின் இகரம் இகரமுனை யற்றே - 127(புணரியல்)

இக்குச் சாரியையின் இகரம் இகர ஈற்றுச்சொல் முன்னர் மேற்கூறியவாறு போலக் கெடும்

எ.கா - ஆடிக்குக் கொண்டான்

2. திங்கள் முன்வரின் இக்கே சாரியை.

-249(உயிர் மயங்கியல்)

திங்களை உணர நின்ற இகரவீற்றுப் பெயர் முன்னர்த் தொழில் நிலைக் கிளவியின் வரும் சாரியை இக்குச்சாரியை ஆகும்.

எ.கா - ஆடிக்குக் கொண்டான், ஆடிக்குச்சென்றான்

3. திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன

-287(உயிர் மயங்கியல்)

ஐகார வீற்றுத் திங்களை உணரநின்ற பெயரும் அவ்வீற்று நாளை உணர நின்ற பெயரும் முன் இகர ஈற்றுத் திங்களும் நாளும் கிளந்த தன்மையவாய் இக்கும், ஆனும் பெற்று முடியும்.

எ.கா - சித்திரைக்குக் கொண்டான், கேட்டையாற்கொண்டான்

இந்நூற்பாக்களிலிருந்து 'இக்கு' சாரியையில் இகரம் கெடும்.

## அக்கு சாரியை வருதல்

1. அக்கென் சாரியை பெறுதலும் உரித்தே
தக்கவழி அறிதல் வழக்கத் தான - 271(உயிர் மயங்கியல்)

அதிகாரத்தான் நின்ற ஊ என்னும் பெயர் மேற்கூறிய னகரத்தோடு அக்கு என்னும் சாரியை பெற்று முடிதலும் உரித்து.

எ.கா - ஊனக்குறை, ஊனச்செய்கை

2. வேற்றுமை யாயின் ஏனை யிரண்டும்
தோற்றம் வேண்டும் அக்கென் சாரியை

-330(புள்ளி மயங்கியல்)

வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாயின் இறுதி உரும் ஒழிந்த இரண்டும் அக்கு என்னும் சாரியை தோற்றி முடிதல் வேண்டும்.

எ.கா ஈமக்குடம், கம்மக்குடம்,

3. ஒற்றுநிலை திரியா தக்கொடு வரூஉம்
அக்கிளை மொழியும் உளவென மொழிப

- 419(குற்றியலுகரப் புணரியல்)

ஒற்று முன் நின்ற நிலை திரியாது அக்குச் சாரியையொடும் பிற சாரியையொடும் வரும் அக்கிளை மொழித்து மொழியும் உள என்று சொல்லுவர்.

எ.கா - குன்றக்கூகை, மன்றப்பெண்ணை

இதிலிருந்து ‘அக்கு’ சாரியையில் அகரம் கெடும்.

**அன் சாரியை பெற்று வருதல்**

1. **எண்ணுப் பெயர்க்கிளவி உருபியல் நிலையும்**

- 420(குற்றியலுகரப் புணரியல்)

எண்ணுப் பெயராகிய சொற்கள் உருபுபுணர்ச்சியின் இயல்பின் கண்ணே நின்று அன் பெற்று முடியும்

எ.கா - ஒன்றன் காயம், இரண்டன்காயம், ஒன்றன்சுக்கு

2. **பெண்டென் கிளவிக் கன்னும் வரையார்**

- 422(குற்றியலுகரப் புணரியல்)

பெண்டு என்னும் சொல்லிற்கு அன் சாரியையும் இருக்கும்

எ.கா - பெண்டன்கை

3. யாதென் இறுதியுஞ் சுட்டுமுத லாகிய
ஆய்த இறுதியும் உருபியல் நிலையும்

- 423(குற்றியலுகரப் புணரியல்)

யாது என்னும் ஈறும் சுட்டு முதலாகிய ஆய்தத் தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும் உருபுபுணர்ச்சியின் இயல்பின் கண்ணே நின்று அன்பெற்றும், சுட்டு முதல் மொழிகள் ஆய்தம் கெட்டும் முடியும்.

எ.கா - யாதன்கோடு, அதன்கோடு, இதன்கோடு, உதன்கோடு

இக்கருத்துக்களிலிருந்து ‘அன்’ சாரியை இயல்பாய் முடியும் என்பது புலனாகிறது.

## முடிவுரை

தொல்காப்பியத்தின் புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப்புணரியல் ஆகிய பகுதிகளில் இடம்பெற்றுள்ள கருத்தொற்றுமை கொண்ட நூற்பாக்களை ஒன்றுபடுத்திக்கூறி விளக்குவதன் மூலம் இலக்கணத்தின் பரந்துபட்ட கலம் சுருங்கி விளக்கம் பெறுவதைக் காணமுடிகிறது. மேலும் அதன் ஒரேதன்மையை தெளிவாக ஒரே கருத்தில் உணர முடிகிறது.